தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONRY, CHURCH OF CEYLON

"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக்கிறானோ அந்த அளவு அதிகமானவற்றையும் மேலானவற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கிறான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகிறான்."

சமாதானத்துக்கான கனியை மக்கள் அனுபவிப்பது எப்போது?

திருப்பணியாளர் மாநாட்டில்

இரண்டு தசாப்த்தங்களாக சமாதானத்துக்கான யுத்தம் என்ற போர்வையில் வடகிழக்கு, தென் - மேற்கு முதலிய பகுதிகளில் வாழும் மக்களின் உடமைகள் சேதமாக்கப்பட்டன. மக்கள் உடல்-உள ரீதியில் அங்கவீனர்களானார்கள். அவர்கள் அங்கங்களில் ஆற்றப்படாத காயங்கள் இன்னும் கொதித்துக் கொண்டேயிருக்கிறது.

இவ்வாறு கொழும்பு மறைமாவட்ட பணியாளர்களுக்கான மாநாடு 2003 மே 26-29 ஆம் திகதிகளில் கிளிநொச்சி கருணா நிலையத்தில் நடைபெற்றபோதே, கலந்துரையாடப்பட்டது.

'சமாதானமும் - ஒப்புரவாகலும்' என்ற தலைப்பில் நடைபெற்ற இம் மாநாட்டில் ரோமன் கத்தோலிக்க யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையும், சரத் இதுமல் கொட அடிகளாரும், தந்தை யூட் லால் அடிகளாரும், டாக்டர் அருள் அன்கிற்ற அவர்களும் தமது அனுபவங்களின் ஊடாக உரையாற்றினார்கள்.

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இம்மாநாட்டில் 86 பணியாளர்கள் கலந்து கொண்டனர். இவர்கள் ஏழு குழுக்களாக பிரிந்து சென்று யாழ்ப்பாண, வன்னிப் பெருநிலப்பரப்பு ஆலயங்களை தரிசித்து, அங்குள்ள சபை மக்களுடனும் விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவினரையும் சந்தித்து கலந்துரையாடினார்கள்.

மேலும் அருட்பணியாளர்கள் இம் மாநாட்டில் கலந்துரையாடுகையில் இந்த யுத்தத்தை முன்னெடுத்து செல்வதற்காக அரசியல்லாபம் கருதும் ஒருசில

(2ம் பக்கம் பார்க்க)

அடிநிலை மக்கள் பற்றி அக்கறை கொள்வோர் யார்?

அருட்பணி - ஞானப்பொன்ராஜா

பொருளாதார ரீதியான வறுமை மானிட வர்க்கத்திற்கு பெரும் பாதிப்பை உண்டு பண்ணுகிறது. மனித தேவைகள் அதிகரிக்க வறுமை நிலையும் பெருகிக் கொண்டே செல்கிறது என 21.06.2003 அன்று நல்லூர் பரி.யாக்கோபு ஆலயத்தில் வறுமை ஒழிப்பு தொடர்பான கருத்தரங்கில் யாழ்.பிரதேச முதல்வர் அருட்பணி N.J. ஞானப்பொன்ராஜா குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் இன்று திருச்சபையும், சமூகமும் வசதி வாய்ப்பானவர்களுக்கு

(2ம் பக்கம் பார்க்க)

வழிபாடுகளில் புதிய சிந்தனை

வழிபாடு என்பது இறைவனுக்குரிய மகிமையை மனிதன் செலுத்துவது ஆகும். இதனை ஒரு குறிக்கப்பட்ட இடத்தில், சூழலில் கட்டுப்படுத்தி வைக்க முடியாது. எனவே இவ வழிபாடு வாழ்வுடன் ஒன்றிணைந்ததாக இருக்கிறது.

இவ்வாறு 2003 மே 14 -17 ஆம் திகதிகளில் கொழும்பு பேராலயத்தில் நடைபெற்ற வழிபாடு பற்றிய தான ஆய்வுக் கருத்தரங்கின் போது தெரிவிக்கப்பட்டது.

அருட்பணி சர்வானந்தன் அடிகளார் ஒழுங்கு செய்த இக்கருத்தரங்கில் கொழும்பு மறை மாவட்டத்தைச் சேர்ந்த 20 பிரதிநிதிகள் கலந்து சிறப்பித்தனர். இதில் ஆயர் கெனத் பெர்ணான்டோ ஆண்டகையும், வேறுபலரும் கருத்துரைகள் வழங்கினர்.

மேலும் இக்கருத்தரங்கில் கூறப்பட்ட விடயங்கள், வழிபாடுகள் உயிரோட்டமுள்ளதாகவும், அரசியல்,

(2ம் பக்கம் பார்க்க)

போல் அடிகளாருக்கு அஞ்சலி

வான் புகழ் கொண்ட வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியராய், அதிபராய், தென் இந்திய திருச்சபையின் திருப்பணியாளராய் நின்று நல்வழிகாட்டிய அணையாத விளக்கு வண.ஏ.ஏ.போல் அடிகளார், இறைபதம் அடைந்த செய்தி கேட்டு தெளிவு அஞ்சலித்துக் கொள்ளுகின்றது.

இரசாயனதுறையின் இமயமாய், இறையியல் வல்லுனராய், நீதியின் பக்கம் நின்று அநீதிக்கு எதிராய் குரல்கொடுப்பவனாய், யாழ்கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவனாய், ஐக்கியத்தை பேச்சில் மட்டுமல்ல நடத்தையில் காட்டிய செயல்வீரனாய், அறிவியல் தேடல் கொண்டு உயர்பட்டங்கள் பல எடுத்தாலும் பதவிமோகம்கொள்ளாத உயர் மனிதனாய் மாணவர் சமூகத்தை அன்பினால் அரவணைத்து நல்வழிப்படுத்தலாம் என்பதை நடைமுறையில் காட்டிய பெரும் தலைவனின் இழப்பு அவ

(4ம் பக்கம் பார்க்க)

ஆயர் யாழ் விஜயம்

கொழும்பு மறைமாவட்ட ஆயர் டூலிப் டீ சிக்கேரா ஆண்டகை இவ்வருடம் யூலை 31ம் திகதி முதல் 4 நாட்கள் யாழ்.விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளார்.

யாழ்.விஜயத்தின் போது ஆயர் கலந்து சிறப்பிக்கும் விசேட நிகழ்வுகள் ஆவணி 1ம் திகதி காலை கைதடி நவீட் பாடசாலை பிள்ளைகளை தரிசித்து உரையாடுவார். மாலை யாழ். கிறிஸ்தவ ஒன்றியத்தினால் ஒழுங்கு செய்யப்படும் குருமார்களுக்கான மாநாட்டில் கலந்து கொள்வார்.

(2ம் பக்கம் பார்க்க)

திருப்பணியாளர் ஞான ஒடுக்கம்

கொழும்பு மறைமாவட்ட திருப்பணியாளர்களுக்கான ஞான ஒடுக்கம் யூலை 26 -29 ம் திகதி வரை கொழும்பில் நடைபெறும். இதில் இலங்கை திருச்சபையின் பிரான்சிஸ்கன் சபை அவுஸ்ரேலிய பிரதேசத்திற்கான முதல்வர் சகோ. அல்பிரல் சிறப்புரையாற்றுவார்.

தகவல் தொழில் நுட்பவளர்ச்சிக்கு முகங்கொடுக்க முன்வாருங்கள்

வண-யஸ்ரின் ஞானப்பிரகாசம்

எமது மண்ணின் மாணவர்களின் கல்விக்கு கணனிக்கல்வி மிகமுக்கியமாக இருந்தும், அதற்கான வசதிகள் ஏற்படுத்தவேண்டும், என்ற ஆவலை இன்று எமது பாடசாலையில், ஆரம்பித்து வைப்பதை எண்ணி மகிழ்வடைகிறேன். இக்கல்வி ஒரு குறிப்பிட்டவர்களுக்கு என்று இராது, சகல மாணவர்களும், ஆசிரியர்களும், அயல்கிராம பாடசாலைகள் -பாமர மக்களின் பிள்ளைகளும் கற்று தொழில்நுட்ப வளர்ச்சிக்கு முகம் கொடுக்க முனைய வேண்டும் என்பதே எமது விருப்பமாகும்.

20.06.2003 அன்று யாழ். சென்.பற்றிக்ஸ் கல்லூரியில் கணனி பயிற்சி நிலையம் யாழ்.ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்

(2ஆம் பக்கம் பார்க்க)

நம்பிக்கை வாழ்வுக்கு ஏற்படும் சவால்கள்

யுத்தத்தினால் பாதிக்கப்படும் மக்களின் நலன்களை மாத்திரம் கவனியாது, யுத்தத்திற்கு மூல காரணியாக எவைகள் தொழிற்படு கின்றனவோ, அந்த ஆணிவேரை அடையாளம் கண்டு அதற்கு எதிராக திருச்சபை குரல் கொடுக்க அழைக்கப்படுகிறது.

இவ்வாறு 2003 மே 26-29 ஆம் திகதிகளில் கிளிநொச்சி கருணா நிலையத்தில் நடைபெற்ற கொழும்பு மறைமாவட்ட திருப்பணியாளர்கள் மாநாட்டில் தனிநபர்களாக, குழுவாக, பிராந்தியங்களாக சமூகத்தில் ஆற்றவேண்டிய பணிகள் பற்றி மன்றம் தெரிவித்த கருத்துக்களாகும்.

இம்மாநாட்டில் நான்கு பெண் உதவித் திருப்பணியாளர்களும், ஒரு மெதடிஸ்த திருப்பணியாளரும் கலந்து சிறப்பித்தமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும்.

மேலும் இம்மன்றம் திருப்பணியாளர்களுக்கு அழைப்பு விடுகையில் திருச்சபை தன்னை துயருறும் மக்களின் பிரதிநிதியாக உலகில் குரல் கொடுக்கவும் அவர்கள் சார்பில் பக்கச்சார்பற்ற முறையில் பணியாற்றவும் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நாம் சமாதானத்தையும், ஒப்புரவாக்கலையும் நோக்கி பணியாற்றும் போது நீதியை மறந்து விடக்கூடாது. நீதி இல்லாமல் சமாதானமோ, ஒப்புரவாக்கலோ உண்டாவது இல்லை. எனவே நீதிக்குள் இருக்கும் அநீதிகளை கண்டிறிவதே, சமாதானப் பணியாகும். மேலும் நாம் இங்கு நிலவுகின்ற சமாதானத்தை சமூகமாக திறனாய்வு செய்ய வேண்டும்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

தலைமைகள் உருவாக ஊக்கப்படுத்துங்கள்

அருட்பணி .லலித்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒவ்வொரு வகையான தலைமைத்துவ முன்மாதிரிகள் காணப்படுகின்றன. இதன் வெற்றி அத்தலைமைத்துவ பண்பினை நாம் அடையாளம் கண்டு அதனை ஊக்கப்படுத்தும் போது மாத்திரமே அதனது வெற்றியை நாம் காணமுடியும்.

இவ்வாறு 2003 யூன் 13-15ம் திகதிகளில் பாதுக்க நகரில், கிறிஸ்தவ மாணவர் இயக்கத்தினால் தலைமைத்துவ பாசறை நடைபெற்றது. இதில் அருட்பணி லலித் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

மேலும் அவர் உரையாற்றுகை

(2 ஆம் பக்கம் பார்க்க)

ஆரோக்கிய சமூகம் மலர இளையோரே முன்வாருங்கள்

யாழ். ஆயர் அழைப்பு

போரின் தாக்கத்தால் இல்லிடம் இழந்து, இடம் பெயர்ந்து, மீள்குடியேறும் தீவக மக்களுக்கு, பிரான்ஸ் நாட்டு உதவித்திட்டத்தின் கீழ் வீடுகள் அமைத்து குறுகிய காலத்தில் இத்திட்டத்தை பூர்த்தி செய்து கொடுத்ததை, பயனாளிகள் கையேற்றுக் கொள்ளும் மக்களின் மகிழ்ச்சியை ஒன்று கூடி வெளியிட்டு நன்றி பகாவதைக் கண்டு பாராட்டுகிறேன்.

இவ்வாறு கியூடெக் இயக்குனர் வண. C.G. ஜெயக்குமார் தலைமையில் 18.06.2003 அன்று அல்லைப்பிட்டியில் கரிதாஸ்- பிரான்ஸ் உதவியுடன் வீடமைப்புத்திட்ட கையளிப்பு விழாவில் யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை [illegible] யாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் எல்லாம் நிறுவனங்கள் தரும் என சோம்பேறிகளாக வாழாது, எமது உடலுழைப்பால், எமது இல்லிடத்தை மேலும் மெருகூட்டி வசதிக் [illegible] மேம்படுத்துவது பயனாளி களின் முக்கியபொறுப்புக்களாகும்.

இன்றைய இளையோரே சமூகத்தின் தலைவர்களாகும். எமது சமூக முன்னேற்றத்தை இன்றைய இளைய தலைமுறையினரிடம் [illegible]ப்பட்டுள்ளது. இத்தலைவர்கள் ஒழுக்கம், பண்பு, குடும்ப நல்லுறவால் கட்டிவளர்க்கப்பட்டாலே நல்ல சமூகம் உருவாகமுடியும்.

சமூகத்தில் சண்டை சச்சரவுகள், கோஷ்டி மோதல்கள் ஆரோக்கிய சமூகத்தை உருவாக்கி விடாது.

பொறுப்பு மிக்க இளையதலைமுறையினர் நம்தேசத்தின் வளர்ச்சியிலும், எதிர்கால தூரநோக்கு செயல்களிலும் முன்மாதிரியாக

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவு
THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONRY, CHURCH OF CEYLON

தெளிவுரை

தீமை செய்வோரைக்
கண்டு மனம் புழுங்காதே
பொல்லாங்கு செய்வாரைக்
கண்டு பொறாமைப்படாதே,
ஏனெனில், அவர்கள் புல்லைப்
போல் விரைவில்
உலர்ந்து போவார்கள்,
பசும் பூண்டைப்போல்
வாடிப்போவர்
ஆண்டவரை நம்பு,
நலமானதைச் செய்,
நாட்டிலேயே குடியிரு,
நம்பத்தக்கவராய் வாழ்
ஆண்டவரிலேயே
மகிழ்ச்சி கொள்,
உன் உள்ளத்து விருப்பங்களை
அவர் நிறைவேற்றுவார்.
(திருப்பாடல்கள் 37:1-4)

மனம் புளுங்குவதும், பொறாமைப்படுவதும்,
இடம்பெயர்ந்து அமைதியை தேடி
அலைவதும், மனிதமனங்களில்
எழும் எண்ணங்களே.
இவற்றால் யார் துன்பப்படுகிறார்கள்?
தன்னைத்தானே தண்டித்துக்கொண்டு
இறை உறவை மறப்போராக,
வாழும் நிலை மாற
மேற்கூறிய இறை வார்த்தை
எம் வாழ்வில் மிளிர வேண்டும்.

யார் எம்மை தூற்றினாலும்,
துன்புறுத்தினாலும் அவர்களுக்காக
செபிக்க மனதை பக்குவநிலைக்குள்
வைத்திருக்க, இறைவார்த்தை
வழியாக, எம்மோடு இறைவன்
வழிகாட்டிக் கொள்கிறார்.
மனித மனங்கள் தமது
கல்லான இதயங்களை கடினமான
வார்த்தைகளை இலகுபடுத்தி
வாழும் வழிகள் இறை
உறவிலே தான் உண்டு
என்பதை நம்புங்கள்.

வானைமுட்டும் கட்டடங்களும்,
வடிவுபார்க்க வர்ணப்பூச்சுக்களும்,
கட்டங்களுக்கான விழாக்களும்,
வியந்து போற்ற மலர்வெளியீடுகளும்,
மனித மாண்பை மதிக்கத்தவறாதபோது,
வெள்ளை அடிக்கப்பட்ட
கல்லறைகளாய், மனம்புழுங்கி
பொறாமை வளர்ந்து,
புல்லாய் பூண்டாய் பொசுங்கும்,
என இறைவார்த்தை இயம்புகிறது.
மனிதம் மதிப்பிழப்பது
இறை உறவு எது என தெரியாது
அங்கலாய்கிறது.
இதில் நாம் யார்?
மேற்சொன்ன இறைவார்த்தைகளை
மீட்டுப்பார்,
கட்டங்கள் அல்ல மனிதமனங்கள்
கட்ட எழுப்பும் போது தான்
இறை உறவு கட்டி வளர்க்கும்
காலம் மலரும்,
அக்காலத்தில் ஆண்டவரும்,
மகிழ்ச்சியில் பங்கு கொள்வார்,
எம் உள்ளத்து விருப்பங்களை
அவரே நிறைவு செய்வார்.
உரிமையோடு இறை
உறவுள்ள மனிதருக்கு
எந்நாளும் பொன்னாளாகும்.

ஆ-ர்

ஆக்கங்கள் எழுதுங்கள், தெளிவு கண்டு பிரசுரிப்போம்.

ஆசிரியர்,
தெளிவு
யாழ். குருமுதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

விலை ரூ. 5/=

ஆயர்....

ஆவணி 2ம் திகதி யாழ். சுண் டுக்குளி மகளிர் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவுள்ளார். மாலை யாழ். ஆலயங்களையும், இறைமக் களையும் தரிசிப்பார்.

ஆவணி 3ஆம் திகதி நல்லூர் சென்.ஜேம்ஸ ஆலயத்தின் 175 ஆவது ஆண்டு விழா நன்றி செலுத்தும் ஆராதனையினை நடாத்தி, யாழ். திருச்சபைகளில் இருந்து புதிதாக திடப்படுத் தல் பெறுவோருக்கு திடப்படுத்தல் கொடுத்து ஆசீர் வழங்குவார்.

இவ்வாரானையின் பின் பிரதேச ரீதியான மாநாடு சென்.ஜேம்ஸ் ஆலய மண்டபத்தில் நடைபெறும். இந்நிகழ்வினை தலைமை தாங்கி நடாத்துவார். இத்தகவல்களை யாழ்.குருமு தல்வர் வட்டாரம் தெரிவிக்கின்றன.

பெந்தெக்கோஸ்து விழா

✪ யூதர்களின் விழா

இஸ்ரவேல் மக்களின் விழாக்க ளில் ஒன்று பெந்தெக்கோஸ்து விழாவாகும். (வி.ப 23:14-16, லேவியர் 23:16) 7 வாரங்கள் இந்த விழா நடைபெறும். (இணைச் சட்டம் 16:9) 7 வது வாரம் விழாவாரமாக வும் 50வது நாள் விழா வின் அதி உன்னத நிலையாகவும் இருக்கும். ஐம்பதாவது நாள் விழா என்பதை கிரேக்க மொழி பேசிய யூதர் தம் மொழியில் பெந்தேக் கொஸ்து விழா என்றனர்.

தொடக்க காலத்தில் " மழை, விளைச்சல் என்பவை கடவுளிடமி ருந்தே வருகின்றன" (எரேமியா 5:24) என்பதை பறைசாற்றினர் கட வுளை நினைத்து புனிதமாக இந்த விழாவை கடைப்பிடித்தனர். முதற்பலன்களை கடவு ளுக்கு படைத்தனர். (எண்ணிக்கை 28:26) பலிகள் செலுத்தப்பட்டன. (எண்ணிக்கை 28:26 -31) (லேவியர் 23:16-17) நடனமும் பாடல் களும் இடம்பெற்றிருக்க வேண்டும். (நீதித் தலைவர்கள் 21:20-21, தி.பா 113-118) ஐக்கிய விருந்துடன் விழா முடிவுற்றது. கானானுக்கு இஸ்ரவேலர் வந்த போது இவ்விழாவில் விடுத லைப் பயண நம்பிக்கைச் சிந்தனையும் சேர்க் கப்பட்டது. கடவுள், மழைக்கும் பசுமைக்கும் மட்டுமல்ல விடுதலைக்கும் ஊற்று என்பது அறிக்கை செலுத்தப்பட்டது. (இணைச்சட்டம் 26:1-11)

இஸ்ரவேல் நாட்டில் வயலில் விளைந்த கதிர்களை அறுவடை செய்ய ஏழு வாரங்கள் எடுக்கும். கோதுமை அறுவடை செய்ய தொடங்கும் முதல் நாளில் புளிப்பற்ற அப் பத்தை உண்டு திருநாளை அறுவடை செய் வர். இறுதிநாளை 50 வது நாளில் அறுவடை செய்த புதிய கோதுமையில் புளிப்பான அப்பம் இரண்டு செய்து விளைச்சலை தந்த கடவு ளுக்கு நன்றி செலுத்துவர். (லேவியர் 23:10:21) புளிப்பான அப்பழத்தை உண்டு மகிழ்வதுடன் விழா முடிவடையும்.

✪ இயேசுவை பின்பற்றியோரும் யூதவிழாவும்!

யூத மரபுகளை பின்பற்றிய இயேசுவின் சீடர்களும், மற்றவர்களும் அறுவடைக்காக வும், விவசாயிகளின் உழைப்புக்காகவும் கடவுளுக்கு நன்றி செலுத்த கூடியிருந்த சந்தர்ப்பத்திலேயே தூயாவி அருளப்பட்டார். (தி.பணி:2) இந்த நாளே திருச்சபையின் பிறந்த நாள். அறுவடை தொடர்பான யூதவிழா, புதிய அர்த்தத்துடன் தொடக்ககால கிறிஸ்தவர் களால் தூயாவியின் விழாவாக்கப்பட்டது. இந்த விழா இயேசுவின் உயிர்ப்பு விழாவின் பின்வரும் 50வது நாளில் கொண்டாடப்படும்.

அருட்பணி S.D.P.செல்வன்
தூய ஆவியானவர் ஆலயம்,
வவுனியா

✪ இயேசுவின் இறையரசுப் பணியிலே தூயாவியின் பணி

திருத்துவக் கடவுளை நம்பும் நாம் தூய ஆவியின் செயற்பாடுகளை குறுகிய வட்டத் துக்குள் மட்டும் நோக்கக் கூடாது.

இயேசுவின் இறையரசுப் பணியை தூய ஆவியானவர் பெரியளவில் உலகெங்கும் நடத்துவதனை நாம் காணலாம். (திருத்தூதர் பணி நூல்) இயேசுவின் பணியின் தொடர்ச்சி யாக தூய ஆவியானவரின் பணி நோக்கப்பட வேண்டும். (யோவான் 16:4-15)

✪ தூயாவியானவர் இணைப்பவர், பிரிப்பவரல்ல!

பெந்தேக்கொஸ்து நாளில் திருத்தூதர்கள் கதைத்தவை வந்திருந்தோருக்கு அவர்களது மொழியில் விளங்கியது. (தி.ப.2:7) எல்லாத் திருத்தூதரும் பேசும் போது ஒருவருக்கும் ஒன்றும் விளங்கிக் கொள்ளமுடியாத குழப் பமே ஏற்பட்டிருக்க வேண்டும். ஆனால் இங்கு மாறாக எல்லாரும் புரிந்து கொள்ளும் நிலை உருவாக்கப்பட்டது. (தொடக்கநூல் 11:1-9) ன்படி பல்மொழி பேசும்போது குழப்பம் ஏற்பட்டது. மக்கள் பிரிந்து செல்ல வேண்டி யிருந்தது. ஆனால் இங்கு பல மொழிகள் காணப்பட்டாலும் உறவு உருவாக்கப்படுகிறது. எனவே தூய ஆவியானவர் பிரிப்பவல்ல, இணைப்பவர், இப்பணியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

✪ பொது நன்மைக்காக செயற்பட ஆற்றலளிக் கும் தூயாவி!

தூய ஆவியானவர் பொது நன்மைக்காக (1கொரி 12:7) செயற்படுகின்றார். இவர் இறை யரசுப் பணியில் திருத்தூதர் ஈடுபட துணிவும் ஆற்றலும் அளித்தார். இயேசுவை மறுதலித்த பேதுருவும், பயந்து ஓடிய மற்றத் திருத்தூதர் களும் இயேசுவினை விசுவாசத்தில் உறுதிப் படுத்தப்பட்டனர். பயந்து, ஒளிந்து வாழ்ந்தவர் கள், பகிரங்கமாக இயேசுமீது வைத்திருந்த நம்பிக்கையை பறைசாற்ற தூயாவி பலமளித் தார். இத்திருத்தூதர்களின் பணி பொது நன் மைக்காகவே என்பதை அவர்களின் வாழ்வும், தியாகமும் வெளிப்படுத்துகின்றது.

✪ பெந்தெக்கோஸ்து விழாவும், நாடும்!

இன்றும் நாம் பெந்தெக்கோஸ்து விழாக்கள் பலவற்றை கொண்டாடியிருக்கின்றோம். ஆனால் திருத்தூதர்கள் போல தூயாவியின் பலத்துடன் துணிந்து கடவுள் விரும்புவதை கூறுகின்றோமா? அதன்படி செயற் படுகின் றோமா? அரசுக்கெதிரான கிளர்ச்சிவாதிகளாக இயேசுவைப் பின்பற்றியோர் சந்தேகிக்கப்பட்ட சூழ்நிலையில் (தி.பணி 5:35-39) கடவுளுக்கு பயப்படுவதே மனித பலத்துக்கு பயப்படுவதி லும் மேல் என வெளிப்படையாக சீடர்கள் கூறிவாழ்ந்தால் (தி.பணி 4:19-20) இறையாட் சிக்காக தூயாவியின் பயத்துடன் அவர்கள் செயற்பட்டனர்.

நாம் இன்று இறையாட்சியின் விழுமியங் களான மனித மாண்பு மனிதஉரிமைகள் நீதி, அமைதி, மனிதநேயம் என்பவற்றுக்காக செயற்படும் போது தான் எம் பெந்தேக் கொஸ்து விழாக்கள் அர்த்தம் பெறும்.

✳

சமாதான....

அரசியல்வாதிகளும், பக்கச்சார்பான ஒருசில ஊடகங்களும், பக்கச்சார்பான ஒருசில மத வாதிகளும் தமது நோக்கத்தை நிறைவேற்று வதற்காக யுத்தத்தை ஒரு கருவியாக பாவித் துக்கொண்டு இருந்தனர். இதன் மூலம் அரசி யல் ரீதியான நெருக்கடியான யுத்தம் பின்னர் தமிழ் - சிங்களம் என்கின்ற இனப்பேதத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்திவிட்டது.

இந்தக் கொடிய யுத்தத்திற்கு முடிவுகட்ட வேண்டும் என்ற நோக்கத்திற்கு அண்மையில் கைச்சாத்திடப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை கூட சமாதானத்தின் கனிகளை மக்கள் உட் கொள்வதற்கு வாய்ப்பை வழங்கவில்லை. அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை அரசாங்கத்தை பொறுத்த வரையில் அவர்களுடைய பொருளாதார நெருக்கடியில் இருந்து விடுதலை பெறுவ தற்கு ஒரு வாய்ப்பை அளித்துள்ளது.

மேலும் தெற்கில் குண்டு சப்தம் இன்றி, மக்கள் அமைதியாக பிரயாணம் செய்யக்கூடிய சந்தர்ப்பத்தை கொடுத்தது. மாறாக, இந்த சமா தான முயற்சியில் வடக்கில் உள்ள மக்கள் சமாதானத்தின் கனிகளை இன்னும் புசிக்க வில்லை. பாதுகாப்பு வலயம் என்னும் போர் வையில் தமிழரின் தாயக நிலங்கள் அபகரிக் கப்பட்டு, மக்கள் அகதிகளாக முகாம்களிலே, வாழ்கின்றார்கள். விவசாய நிலங்கள், மீன்பிடி வளங்கள் பறிமுதல் செய்யப்பட்டவையாக காணப்படுகிறது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ஒருசில மதவாதிகள் வடக்கில் பௌத்த, இந்து, கிறிஸ்தவ துவேசத்தினை மக்கள் மீது திணிப் பதற்கு முயற்சிக்கின்றார்கள். சிறுவர்கள் துஷ் பிரயோகம், மக்கள் தலைமறைவாகும் நிலை, இயற்கை வளங்களின் அழிவு முதலியவை கள் இன்னும் நிறுத்தப்படவில்லை.

வடக்கில் சொந்த மக்கள் ஒரு பிரதேசத் தில் இருந்து இன்னொரு பிரதேசத்திற்கு செல்வதற்கு அனுமதிப்பத்திரம் எடுக்க வேண் டிய நிலை மக்கள் தங்களால் சுமக்க முடி யாத சுமைகளை மக்கள் மீது சுமத்துதல் முதலியவைகளும் இன்னும் நிறுத்தப்பட வில்லை. எனவே மக்களின் துன்பம் நீங்க வில்லை.

தெற்கில் சில அரசியல் அமைப்புக்களும் அதனை ஆதரிக்கும் கட்சியும் அமைதிக்கு குந்தகம் விளைவித்துக் கொண்டிருக்கிறார் கள். மேலும் தெற்கில் வேலையில்லாப் பிரச் சினை, வறுமை, விவசாயம் செய்யமுடியாத வரட்சியான நிலை, விவசாயிகளுக்கு போதிய கடன் வழங்காதநிலை முதலிய இன்னும் பல துன்பம் தொடர்நிலையாகவே இருக்கின்றது.

சுயதொழில் வாய்ப்பின்றி பாதிக்கப்படும் இளைஞர்கள் வழியேதும் தெரியாது இராணு வத்தில் இணையும் நிலை தொடர்ந்து கொண்டே இருக்கிறது. வடக்கிலும் - தெற்கி லும் பல அபிவிருத்தித்திட்டங்களை நடைமுறைப் படுத்துவதாக கூறிய போதிலும் அது இன்ன மும் வாய்ச் சொல்லிலும் ஊடக பிரசாரங்கள் செய்வதிலும் மட்டுமே உள்ளது.

எனவே சமாதானத்திற்காக மேற்கொள் ளப்பட்ட யுத்தநிலையே, புரிந்துணர்வு ஒப்பந் தம் மேற்கொள்ளப்பட்ட பின்னரும் நிலவுவது கவலை தரும் ஒன்றாக காணப்படுகிறது. எனவே, இம்மாநாடு மக்களின் சிந்த னைக ளையும் கருத்துக்களையும் ஆரோக்கியமான முறையில் ஆராய்ந்து கொண்டது.

தகவல்...

ஆண்டகையினால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் தலைமை தாங்கிய சென்.பற் றிக்ஸ் கல்லூரி அதிபர் வண.யஸ்ரீன் ஞானப் பிரகாசம் மேற்கண்டவாறு உரையாற்றினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் வெளி நாடுகளில் சிறுவர் முதல் பெரியோர் வரை தினமும் கையாண்டு வரும் கணனி எமது மாணவர்கள், ஆசிரியர்கள் பயன்படுத்துவதற்கு என்றும் துணைக்கரமாக திகழும் இந்நிறுவனம் என்றார்.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் உரையாற்று கையில் முன்னைய காலங்களில் எமது மண்ணில் ஆசிரியரே உலகம் என எண்ணி அவர்களின் வழிகாட்டலால் உருவாக் கப்பட்டு வளர்ந்தோம். இன்று உலகமே கண னிக்குள் அடங்கி விட்டதாக கருத்து ரைக்கின் றார்கள்.

கணனி கண்டிக்காது, பாராபட்சம் காட்டாது, அரவணைத்து ஆலோ சனை கூறாது எவை யும் நாம் தேடிப் பெறமுயலவேண்டும். எம் உணர்ச்சிகளை உணர்வுகளை உணர்ந்து கொள்ளாது. ஆகவே இவை சிலருக்கு நல் வழிகளை தேர்ந்தெடுக்கவும், வழிகாட்டல் இன்மையால் தவறுக்கும் காரணமாகி விடும். கணனியின் நல்ல பக்கங்களை தேர்ந்து எடுப் பதிலும் வழிகாட்டுவதிலும், தகவல் தொழில் நுட்ப வளர்ச்சியில் ஈடுகொடுப்பதில் நாம் முன்னேற்ற வழிகளை கற்கவேண்டும் என்றார்.

அடிநிலை...

தான் நன்மைகள் அதிகம் செய்கிறது. ஆனால் அடிநிலை மக்களை நோக்கி பணி யாற்றவும், அவர்கள் முன்னேற்றத்தில் கவனம் செலுத் தவும், தவறிவிட்டது. இயேசு சொல் கிறார் சின்னஞ் சிறியோருக்கு எதைச் செய்கி றீர்களோ அதை நீங்கள் எனக்கே செய்தீர்கள் என்றார். அந்த சின்னஞ் சிறியோர் எமது சபையில் - சமூகத்தில் அடக்கப்பட்டு - ஒடுக் கப்பட்டு இருப்போர். அவர்கள் உயர்வுக்கு கைகொடுத்துழைக்க வேண்டும்.

கடந்த இரண்டு தசாப்த காலத்திற்குள் எத்தனையோ மக்கள் யுத்தத்தினால் வறுமை யாக்கப்பட்டிருக் கிறார்கள். இந்த வறுமையின் சுமை தாங்க முடியாமல் ஒருவர் உடல் உள ரீதியாக பாதிக்கப்படும் அபாயமும் இருக்கி றது. ஒருவர் வறுமையினால் மனஅழுத்தம் பெற்று தற்கொலை செய்து கொண்டால் அதற்கு பொறுப்பு சமூகம் தான். அத்துடன் திருச்சபை யும் தான். திருச்சபை வழிபாடுகள் மட்டும் செய் தால் இறைபணி என்று கருதி, சமூக பணியை மறந்து விட்டது. ஆனால் சமூகப் பணி ஆற் றுவது இன்றியமையாதது. கிறிஸ்தவர்களா கிய நாம் எமது சுற்றுச் சூழலில் எம் கண் முன்னே துன்பப்படும், வறுமைப்பட்ட மக்க ளுக்கு தனிமனிதனாக, குழுவாக பணியாற்ற இறைவன் அழைக்கிறார். அதற்கு பாத்திர வான்களாக இருப்போம் என்றார்.

வழிபாடுகளில்.....

பொருளாதார கலைக்கலாச்சாரத்தை வெளிப்படுத்தக் கூடியதாகவும், சுகந்திரமிக் கதாகவும் இருக்கவேண்டும். வழிபாடானது அனைவரையும் உள்ளடக்கியதாக அமைய வேண்டும். அருளுரைகளினால் மாத்திரம் வழிபாடுகளை மேற்கொள்ளாது, நாட கம், பாடல், உரையாடல்கள் மூலமும் மக்களை கவ ரும் வண்ணம் வழிபாடுகளை ஒழுங்கு செய்ய வேண்டும்.

இலங்கை திருச்சபை வழிபாட்டு ஒழுங்கைப் பொறுத்தவரை 1662ம் ஆண்டு வழிபாட்டு ஒழுங்கு, 1960, 1988,1998 ஆகிய வழிபாட்டு ஒழுங்கு முறைகள் வழிபாடுகளில் பயன்படுத் தப்படுகின்றன. புதிய உத்தி முறைகள் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்படுகிறது. கால மாற்றத்திற்கு ஏற்ப, மக்கள் மனங்களை கவ ரும் வண்ணம் வழிபாட்டு முறைகள் மாற் றம் செய்ய வேண்டியது மிகவும் அவசிய மானது. இக்கருத்தமர்வில் கருத்துக்கள் பரி மாற்றப்பட்டது.

தலைமைகள்..

யில், எமது அன்றாட வாழ்க்கையில் பல தலைவர்களை சந்திக்கின்றோம். ஆனால் அவர்கள் எல்லாரிலும் சிறந்த தலைவர்களை காணமுடிவதில்லை. காரணம் அவர்களுக்குள் ஒழிந்திருக்கும் பண்புகளை அவர்கள் சரியாக அடையாளம் காணவில்லை. இதனால் அவர் களுக்கும், அவர்களால் வழிநடாத்தப்படும் சமூகத்திற்கும் இடையில் வேறுபாடுகள் வளர்ந்து செல்கின்றன. எனவே இவ்வாறான வேறுபாடு கள் களையப்பட வேண்டுமாயின் தலைமைத் துவம் அடையாளம் காணப்படவேண்டும்.

சில நேரங்களில் சில சமூகங்களின் தேவைக் கேற்ற தலைமைத்துவம் அவசியமானது. ஆனால், இன்றைய திருச்சபையும், திருச்சபை சார சமூகங்களும், அதனை வழங்க தவறி விடுகின்றன. கிறிஸ்துவின் பணியில் இதனை நாம் காணலாம். தேவைகளோடு இருக்கின்ற வர்களை வழிநடத்த ஊக்கப்படுத்தும் தலை மைத்துவம் ஒன்றே சமூகப் புலங்களில் முக்கி யமானதாக கருதப்படுகின்றது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" ஊனியல்பின் இச்சை தூய ஆவிக்கு முரணானது" --

சமநிலை உறவாடலால் சமய விழுமியங்கள் பகிரப்படவேண்டும்

அருட்பணி. கே.கருணசேகர B.Th, B.D, M.Th.

மெதடிஸ்த திருச்சபையின் யாழ்.சேகர முகாமைக் குருவும், யாழ்.பல்லைக்கழக கிறிஸ்தவ நிலையப் பொறுப் புரிமைக்குருவும், யாழ்.கிறிஸ்தவ ஒன்றிய செயலாளரு மாகிய அருட்பணி கே.கருணசேகர அடிகளார் தெளிவுக் குத்தந்த சிறப்புச் செவ்வி இதோ.....

உங்கள் சமூக - சமய பணி வாழ்வு பற்றி....?

நான் யாழ்ப்பாணம் வந்த காலத்தில் திருச்சபையின் நிலையைப் பார்க்கின்றபோது எல்லாம் விழுந்து, நொருங்கி, அழிந்து காணப்பட்டது. அந்த நிலையில் இருந்து திருச்சபைகளை உயிர்பிக்கின்ற பணிதான் எனது பிரதான பணியாக இருந்தது. ஆகவே, அந்த வகையிலே சிறிது சிறிதாக நிறைய காரியங்களை கட்டியெழுப்பக் கூடியதாக இருந்தது. என்னென்ன இல்லையோ அதனை உருவாக்கவும், என்னென்ன இருந்து அழிந்ததோ அதனைக் கட்டியெழுப்பவும் வேண்டும். அதுதான் எமக்கு பிரயோசனமாக இருக்கும். அதைத்தான் நான் இங்கு ஆற்றினேன்.

எங்கள் மெதடிஸ்த திருச்சபையை பொறுத்தளவில் எங்களை முகாமைக்குரு என்று சொல்லுவார்கள். எனக்கீழ் ஆறுசபைகள் இருக்கின்றன. இதைவிட வைத்தியாசலை ஒன்றும், சத்துணவுத்திட்டங்கள் நான்கு இடங்களிலும், ஒரு சிறுவர் இல்லமும் இதில் 60 பிள்ளைகள் இருக்கின்றனர். முதியோர் இல்லமும் இருக்கின்றது. இவையெல்லாவற்றுக்கும் முகாமையாளராக இருந்து பணியாற்றுகின்றேன்.

எனது முழுமையான விருப்பம் சமூகத்தைக் கட்டியெழுப்புவதும், சமூகத்தில் யார் யாருக்கு என்னென்ன காரியம் செய்யவேண்டுமோ அதனைச் செய்யவேண்டும் என்பதேயாகும். இப்பணியாற்ற நிறைப்பணம் தேவைப்பட்டதாக இருக்கின்றது. அவைகிடைக்கின்றபோதெல்லாம் உரிய வழிமுறைகளில் பயன்படுத்தி சமூகமேம்பாட்டுக்காக செலவழிக்கின்றோம்.

சமூகப்பணியைத்தான் நான் முதன்மைப்படுத்துகின்றேன், அதனோடு இறைபணியையும் ஆற்றுகின்றேன். ஆனால், இவை இரண்டையும் பிரிக்கமுடியாது, இவை இரண்டையும் செய்யவேண்டும், செய்கின்றேன். இறைவன் சொல்லுகின்றார். பிரதான கட்டளையாக, இறை மக்களில் அன்பு செலுத்த வேண்டும் என்று. ஆகவே, அது சமூகப்பணி தான். அடிப்பட்டவர்களுக்கு காயத்தை ஆற்றுப்படுத்தி, அவர்களைப் பராமரித்து, அவர்கள் வழிக்கு அனுப்புவதுதான் எனது பணி. இதைத்தான் செய்யத்துடிக்கிறேன். எனக்கு சமயமும் - சமூகமும் பிரதானமானது.

உலகமயமாக்கல் ஆன்மீகத்துக்குச் சவாலாகுமா?

உலகமயமாக்கல் நல்லது. உலகமயமாக்கல் இல்லையென்றால், எந்த நாடும் முன்னேறியிருக்காது. எமது இலங்கை நாடு முன்னேற்றம் அடைவதற்கு எப்படியும் ஒரு உலகமயமாக்கல் அவசியம். ஏன் ஒருவரைப்பார்த்து இன்னொருவர் முன்னேறுகின்ற நிலைகூட. இருக்கின்றது. இங்கே பிரச்சினை என்னவென்று சொன்னால், இங்கு உலகமயமாக்கலல்ல. நவீன உலக மயமாக்கல்தான் ஆன்மீகத்திற்கு சவாலாக அமைகின்றது. இதைத்தான் நாம் சாரியாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

உலக நாடுகளில் நடைபெறும் சண்டைகள், எமக்கு தாக்கம் ஏற்படாது என்று ஒதுங்கிவிடலாகுமா?

இப்படித்தான் யாழ்ப்பாணத்திலும், மட்டக்களப்பிலும் அடிபடுகின்ற நேரத்தில் கொழும்பில் உள்ளவர்களுக்கு கவலையில்லை. கொழும்பில் அடிபடுகின்ற நேரத்தில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பில் உள்ளவர்களுக்கு கவலையில்லை. ஆனால், கொழும்பிலும், மட்டக்களப்பிலும், யாழ்ப்பாணத்திலும் சண்டை நடக்கும் போதுதான் அந்த அடியின் ருசி தெரிந்தது. மரணம் என்றால் என்ன? இரத்தம் என்றால் என்ன? பயம் என்றால் என்ன என்பது புரிந்தது. ஆகவே, இப்படியான ஒரு சூழ்நிலை வந்துதான், சமாதானத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து அதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இப்போது கடவுளின் கருணையால் ஓரளவுக்குச் சமாதானமாக இருக்கிறோம்.

இதேநிலைதான் வெளிநாடுகளைப் பொறுத்தவரை, மற்றைய நாடுகள் அடிபடும் என்றுசொன்னால், நாங்கள் அதைக்குறித்து அக்கறையில்லாமல் இருக்கின்றோம். ஆனால், அந்த நாடுகளுக்கும் சமாதானம் தேவை. அந்த நாடுகளில் சமாதானம் இல்லாமையினால், நாங்களும் தாக்கப்படுகின்றோம். அதாவது - பொருளாதாரம், போக்குவரத்து, பணவீக்கம் போன்றவற்றில் தாக்கப்படுகின்றோம்.

ஆகவே, இயேசு சுவாமியின் ஒரே உடல் என்று சொல்கின்ற நிலை, திருச்சபைக்குமாத்திரம் அல்ல. இலங்கை நாட்டுக்கும், அதைவிட உலக நாடுகளுக்கும் தான். எல்லா நாடுகளும் அங்கமாக இருக்கின்றது என்று நாம் யோசிக்கவேண்டும். எல்லா ஊர்களும்கூட உடலில் அங்கமாக இருக்கின்றது. ஆகவே, ஒருவருக்குக் கொருவர் அக்கறையில்லாத வாழ் வைக்களைந்து - இந்து, பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம். ஏன் எந்த மதத்தவராக இருந்தாலும், நாம் அக்கறையான வாழ்வு வாழவேண்டும்.

ஒரு அறிஞர் "ஒரு மனிதன் மற்றைய மனிதனுடைய வாழ்விலே பொறுப்புள்ளவனாக இருக்கவேண்டும்" என்கின்றார். ஆகவே, நாம் மற்ற மனிதரில், மற்ற நாடுகளில் பொறுப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். அதுதான் ஒரு சமூகத்தை கட்டியெழுப்பவதற்கு நல்ல வழிமுறையாகும். ஆகவே, இலங்கையில் இருக்கின்றவர்களுக்கு மாத்திரம், வெளிநாட்டில் இருக்கின்றவர்களுக்கு மாத்திரம் சமாதானம் வேண்டும் என்பதல்ல. மாறாக, அனைத்து உலகிற்கும் சமாதானம் தேவை. அதற்காக - செபிக்க, குரல்கொடுக்க, சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். இயலுமான காரியங்களையெல்லாம் செய்து, சமாதானமற்ற இடத்தில் சமாதானத்தைக் கொண்டுவர முயற்சிக்கவேண்டும். கடவுள் சமாதானத்தை விரும்புகின்றார். இதுதான் கடவுள் இராச்சியம். இதற்கு உழைக்க திருச்சபையும் ஏனைய மக்களும் முன்வரவேண்டும்.

நாட்டின் அமைதிக்கு ஆன்மீக வாதிகளின் பங்களிப்பு எப்படி அமையவேண்டும் என எதிர்பார்க்கிறீகள்?

இன்றைக்கு நாட்டின் அமைதிக்கு, எங்களின் சமய போதனை ஆன்மீக வாதிகளின் போக்குகள் எல்லாம் ஒரு வட்டத்துக்குள் தான் இருக்கின்றது. முஸ்லிம் - முஸ்லிம்களுக்குள்ளும், பௌத்தம் - பௌத்தத்துக்குள்ளும், இந்து - இந்துக்குள்ளும், கிறிஸ்தவம் - கிறிஸ்தவத்துக்குள்ளும் இவ்வாறு தமக்குள் ஒரு வட்டத்தை அமைத்து அதற்குள் கிறிஸ்தவன் இந்து வட்டத்தைப் பார்த்து அவன் போதிக்கிறது சரியில்லை என்றும், இந்து கிறிஸ்தவனைப் பார்த்து அவன் போதிக்கிறது சரியில்லை என்று சொல்வதும் இவ்வாறு ஒருவருக்கொருவர் கருத்து முரண்பாடுகளினாலும், வன்முறைகளினாலும் பாதிக்கப்படுகின்றார்கள். ஆனபடியால், நான் நினைக்கிறேன் இதற்குரிய வட்டத்துக்குள்ளே மாத்திரம் ஆன்மீகத்தைப் பேசாது, அதை [illegible] வட்டத்துக்குள்ளே இருக்கின்ற பெரிய பிரிவுச் சுவர்களை உடைத்து அந்த வட்டத்தைக் கொஞ்சம் நீக்கிவிட்டு எல்லோரும் ஒன்றாகக் கலந்து எல்லாச் சமயங்களும் ஒன்று சேர்ந்து அவர்களுக்குரிய பொதுவான காரியங்களைக் குறித்து சிந்தித்து, பொதுவான தூரநோக்குடன் அவற்றை எல்லா மக்களும் உணர்ந்து ஒன்றாக உழைக்க வழியமைக்க வேண்டும். இவ்வாறு செய்யாது போனால் மதங்களில் மதம் பிடித்தவர்களாக, மனிதத்தை நேசிக்காது வன்முறைக் காரர்களாகத்தான் நாம் இருப்போம். எங்களின் சமயம் எங்களின் செயல்கள் என்று குறுகிப் போய்விடுவோம்.

ஆகவே, கோயிலைக்கட்டி, கட்டடத்துடன் மாத்திரம் நிற்காது அதனோடு சமூகத்திற்குள்ளேயும் வேலை செய்ய வேண்டும். அதற்குச் சமயங்கள் ஒருமைப்பாட்டுக்குள் வரவேண்டும். அவற்றின் நல்ல பொதுவான காரியங்கள் எதுவென்று சிந்தித்து அதைப் போய் மக்களிடம் சொல்லி, சமூக மேம்பாட்டுக்காக உழைக்கத் தூண்டவேண்டும். இது தான் ஆன்மீகவாதிகள் நாட்டின் அமைதிக்குப் பங்களிக்கும் வழியாகும் என்று நான் கருதுகிறேன்.

தியானம் - ஒதுதல் - ஆன்மீகத் தேடல் மக்களிடையே வளர எப்படியான பணிகள் தேவை, எப்படி மக்கள் பங்களிக்கலாம்?

மக்களோடு நாங்கள் முதலாவது தொடர்புகளை ஏற்படுத்தவேண்டும். மக்கள் வேறு, நான் வேறு, நான் ஒரு மக்களுக்கு பெரியாள் மக்கள் எல்லாம் சிறியவர்கள், நான் ஏதோ சொல்லப் போகிறேன். அவர்கள் எல்லாம் கேட்கவேண்டும் என்ற மனப்பான்மை இருக்கக்கூடாது. மக்கள் எனது நண்பர்கள். அவர்கள் என்னைப் போன்றவர்கள். எனக்குச் சமமானவர்கள் என்று அவர்களோடு உறவாடி, அவர்களோடு இணைந்து அவர்களுக்குச் செய்து கொடுக்க வேண்டிய காரியங்களைச் செய்து கொடுத்து அவர்களை நமது செல்வாக்குட்பட்டவர்களாக்கிக் கொள்ள வேண்டும்.

ஆகவே, என்னோடு சேர்ந்து அவர்களும் நான் உணர்வது போல உணரவேண்டும். இந்த ஆன்மீக வாழ்வுக்கு இப்பேற்பட்ட காரியங்கள் முக்கியம் என்பதை அவர்களுக்கு அவர்களாக உணரவைக்க வேண்டும். நாங்கள் போதிப்பது முக்கியமல்ல. அவர்களுடன் சேர்ந்து உறவாடி, அவர்களுடன் இருந்து அவர்கள் பிரச்சினைகளுக்கு எப்படித் தீர்வு காணலாம். எப்படியான முறையிலே அமைதி காணலாம் என்ற காரியங்களை அவர்களுடன் சேர்ந்து செய்யவேண்டும். எனக்குத்தான் எல்லாம் தெரியும் என்ற நிலையிலிருந்து விலகி நான் ஒரு ஊக்குவிப்பாளர். நானும் உங்களைப் போலத்தான் உங்கள் அனுபங்களைப் பெற்றிருக்கின்றேன் என்று அவர்களுடன் தொடர்பு கொள்ளும்போது அவர்களுக்கு வழிகாட்டிகளாகிய எங்கள் மேல் நம்பிக்கை பிறக்கும். இதன் மூலம் மக்களை நல்வழிப்படுத்தலாம். இதற்கு நிறைய நேரம் - காலம் - தேவையானதாக இருக்கின்றது. இதையொரு விசேட பணி என்றுதான் நான் கருதுகின்றேன்.

ஒரு கிராமத்திற்குச் சென்று அவர்களுடன் இருந்து அவர்கள் கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கம் என்பவற்றைக் கண்டு அவர்களுடன் உறவாடி, உண்டு, உறங்கிக் கொள்ளவேண்டும். அப்போது வித்தியாசமானவர்களைச் சந்திக்க வேண்டிய ஏற்படும் அவர்களுடன் உறவு கொள்ளவேண்டி வரும். அதன்மூலம் அவர்களை ஒரு நல்வழிக்குக் கொண்டுவரலாம்.

இந்த ஆசை எனக்கு நீண்டநாட் [illegible] பணிகளைச் செய்து முடிக்கலாம் என்று நான் கருதுகின்றேன்.

விடுதிகள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?

நான் ஒரு காலத்தில் யுத்த சூழ்நிலையில் - அம்மா, அப்பா இல்லாத வறுமைப்பட்ட குடும்பப்பிள்ளைகளுக்கு உதவிசெய்யும் இடம்தான். விடுதிகள் என்று கருதினேன். ஆனால், அதுதான் விடுதிகள் நடத்துகின்ற அமைப்புக்களின் நோக்கமாகும். தற்போது இந்த விடுதிகள் பற்றி ஆறியிருந்து பார்க்கும்போது இந்த விடுதியில் இருக்கும் பிள்ளைகள் கூடுதலாக இன்னொரு நபர்களில் தங்கி வாழ்கின்றநிலை இருக்கின்றது. அதைப்போலப் பிள்ளைகளின் பெற்றார்கூட இதில் தங்கி வாழ்கின்ற சூழலில் தங்களை அறியாமலே மாட்டுப்பட்டுவிட்டார்கள்.

ஆனபடியால், இப்போது ஒரு புதிய நோக்கம் ஒன்று பிறக்கின்றது. இந்தப் பிள்ளைகளைத் தங்கள் தங்கள் வீடுகளில் வைத்து அவர் கள் சூழ்நிலையில் அவர்கள் உறவினருடன் வைத்து, அவர்கள் பெற்றோர் தொழில்களையும் பழகி, அதனையும் செய்து பாடசாலைக்குச் செல்கின்ற வசதிகளையும் மேலதிகமாகப் படிக்கின்ற வசதிகளையும் செய்து கொடுத்தல் ஆற்றல் ஆளுமை கொண்ட பிள்ளை படிப்பான் அல்லது போனால் அவன் தன் சூழலில் என்ன தொழில் செய்ய முடியுமோ அதனைப் பழகித் தன்வாழ்க்கையைக் கொண்டு நடத்துவான்.

விடுதிகளில் வைத்துப் படிக்கின்ற பிள்ளைகள் எல்லாம் க.பொ.த (சாதாரணம், உயர்தரம்) பரீட்சையில் சித்திபெறுவதில்லை. அவர்கள் விடுதி வாழ்க்கையை முடித்துக்கொண்டு வீடு செல்கின்றபோது, முரண்பாடு ஏற்படுகின்றது. தான் படித்துக் கொண்ட சூழல் தற்போது வாழும் சூழல் வித்தியாசமாக இருப்பதினால் ஆகும். இதனால், வாழ்க்கையின் அடுத்தகட்ட நகர்வு என்னவென்று தெரியாது இருக்கின்றார்கள். அதேநேரம் தன் சூழலை, தன் உறவினரை ஏற்றுக் கொள்ளவும் தயங்குகின்றார்கள். இப்படிப்பட்ட பிள்ளைகளுக்கு அடுத்த நிலைப்பாடு என்ன வென்பதைச் சொல்லிக் கொடுக்க விடுதி அமைப்புக்கள் தவறிவிட்டது. இதனால், வன்முறை, தாழ்வு மனப்பான்மை, குற்றவுணர்வு அந்தப் பிள்ளையை உளரீதியாக தாக்கின்றது. ஆகவே, இப்படிப்பட்டவர்களுக்கு அவர்கள் கிராமத்தில் பொருத்தமான தொழில் பயிற்சி முறைகளைக் கற்றுக்கொடுத்து அந்தப் பிள்ளைகள் தங்கள் பிழைப்பை நடத்த வழிகாட்ட வேண்டும். பிறரில் தங்கியிருக்காமல் தாமே உழைத்து வாழவழிசொல்லிக் கொடுத்தல் வேண்டும். அவர்கள் அவர்களாக முடிவெடுக்க வழிகாட்டவேண்டும்.

இந்தப் புதிய நோக்கத்தின் படி விடுதிகளை எல்லாம் மூடிவிட்டுக் கிராமங்களுக்கு அனுப்புவது நல்லம் போல, இருக்கின்றது. அது மாத்திரமல்ல ஒரு பிள்ளை ஒரு கிராமத்தில் இருக்கின்றபோது, அவனது குடும்பம், உறவுகள், சூழல் எல்லாவற்றையும் நாங்கள் அறியக்கூடியதாக இருக்கும்.

விடுதியில் ஒரு பிள்ளை பற்றி அறிவது கிராமத்தில் செல்கின்ற போது பலவாக மாறுகின்றது. இதன் மூலம் அவர்கள் தொழில் முறைகளுக்கு உதவிசெய்ய முடியும். திருச்சபையின் தொடர்புகளும் அதிகரித்துக்கொள்ளும்.

இன்று பல விடுதிகளுக்கு செலவுசெய்ய வெளிநாட்டிலிருந்து காசுகளை அனுப்புகிறார்கள். நாங்கள் இந்தக் காசைக்கொண்டு பிள்ளைகளுக்கு முதலாளிகளாக தொழிற்படுகின்றோம். ஆனால், பணிவிடைக்காரர்களாக இருக்கவேண்டிய நாங்கள் அந்த பிள்ளைகளை அடிமையாக வேலை வாங்குபவர்களாக அவர்களை நாம் பாவிக்கின்றோம். இந்நிலை அகலவேண்டுமென்று சொன்னால் அந்த பிள்ளைகளை அவர்கள் வீடுகளுக்கு அனுப்பி தன்மானத்துடன் வாழ நம்பிக்கையூட்டவேண்டும். ஆகவே, உதவிகள் என்று சொல்லப்படுபவை பிள்ளைகளின் சூழலில் இருந்து வழிசெய்ய வேண்டும். இதன் மூலம் நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்பலாம் என்று நான் நம்புகிறேன். இந்த முறையை வெகுசீக்கிரமாய் கொண்டுவர முயற்சிக்கிறேன்.



பெந்தேகொஸ்து அனுபவத்தை எப்படி அனுபவிக்கலாம்?

கிறிஸ்து பரமேறியதற்குப் பின்பு பெந்தேகொஸ்தே தினத்திலே சீடர்களின் வாழ்வில் நடந்த காரியம் என் மனத்தை மிகவும் தொட்ட காரியம். ஏனெனில் அன்றைய தினத்தில் இரண்டு அற்புதங்கள் நடந்தது. ஒன்று தீர்க்கதரிசன வார்த்தை சீடர்களுக்கு கிடைத்தது. இரண்டாவது, சீடர்கள் பேசிய கடவுளின் மகத்துவத்தை எல்லாரும் தங்கள் மொழிகளிலேயே விளங்கிக்கொள்வதற்கு கடவுள் ஒரு அற்புதத்தைச் செய்தார். இந்த இரண்டு அற்புதங்களும்தான் மிகவும் முக்கியம். அற்புதங்களின் ஊடாக கடவுள் அந்த இடத்தில் செய்யவந்த காரியம் என்னவென்றால் கடவுளின் மகத்துவத்தினை இறைமக்கள் விளங்கிக் கொள்ளவேண்டும் என்பதாகும்.

பெந்தேகோஸ் தினத்தில் நடந்த சம்பவத்தை - சித்தரிக்கும்போது, அவர்கள் எல்லாரும் ஒரு மனப்பட்டு கடவுளை நோக்கி ஜெபித்தார்கள், அதனால் அங்கு ஆவியின் அனுக்கிரகம் கிடைத்து கடவுளின் மகத்துவத்தை எடுத்துக் சென்னார்கள். இந்த அனுபவத்தை பெறவேண்டும் என்றால் எமது சமூகத்தில் ஒன்றுபட்டு ஜெபித்தல், ஒன்றுபட்ட வாழ்தல் மிகவும் அவசியமானது. இன்றைக்கு கிறீஸ்தவர்களிடையே ஒரு மனப்படுத்தல் இன்னமும் உருவாக்கப்படவில்லை. நாங்கள் எப்படித்தான் வெளிப்படையாக ஒற்றுமை பற்றிப் பேசினாலும் மனதுக்குள்ளே முரண்பாடுகள் இருக்கின்றது. அதாவது யாருக்குக் கூட வருவாய் வருகின்றது, யாருக்குக்கூட நன்மை இருக்கிது என்ற எண்ணத்தினால் முரண்பாடுகள் தோன்றுகின்றது. இவற்றிலிருந்து விடுபட்டு நாம் ஒரு மனப்பட்டு கடவுளிடம் போகும் போது, இறைவன் தனது மகிமைக்காக எம்மைப் பயன்படுத்துவார். கடவுள் ஒரு மனிதனைப் தனது மகிமைக்காகப் பாவிக்கும் போதுதான் அவன் உன்னத நிலையை அடையமுடியும். ஆகவே, அந்த உன்னத நிலையைப்பெற நாம் ஒன்றுபட்டு செபிக்க அழைக்கப்படுகின்றோம்.

தொளிவு வாககர்களுக்கு நீங்கள் கூறவிரும்புவது?

தொளிவு பத்திரிகையை எல்லோரும் வாசியுங்கள். தெளிவு பத்திரிகைக்கு ஆக்கங்கள் எழுதுங்கள். தெளிவு பத்திரிகையில் வருகின்ற செய்திகள் மாத்திரமல்ல. செய்திகளின் ஊடாக எங்களில் சில மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்பதுதான் தொளிவு எதிர்பார்க்கின்றது. ஆகவே, இதுவும் ஒரு சுவிசேஷ பணியாக, சுவிசேஷ நூலாக நீங்கள் இதைக்கருதுங்கள்

மனிதனிலே மாற்றங்களை கொண்டு வருவதற்காக திருச்சபையினால் நடாத்தப்படுகின்ற ஒரு பத்திரிகை இது. ஆகவே, ஒவ்வொரு வாசகனும் ஏதோ ஒன்றை எதிர்பார்பார்பான் அந்த எதிர்பார்ப்பை இந்த சிறிய ஊடகத் தினூடாக நிறைவு செய்யும் என்று தெளிவை வாழ்த்தி நிற்கின்றேன்.

"விடுதியில் வாழும் சிறுவர்கள் தம் சொந்த இல்லங்களில் வாழும் சூழலை ஏற்படுத்த வேண்டும்."

நவீன உலகமயமாக்கம் நமது மக்களை சீரழித்து விடக்கூடியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையில் சித்தியடைய பயன்தரும் வழிகள்

பேராசிரியர் டி.சே.நாராயணன்

தேர்வுக்கு முன்

✡ மொத்தப் பாடத்தைக் கண்டு மலைத்துப் போகவேண்டாம். எல்லாப் பாடங்களும் உள்ள பேர்ஷனை தனித் தனியாகச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துப் பட்டியல் போட்டு அன்றாடம் அவற்றைப் படித்து "ரிவைஸ்" பண்ண வேண்டும். தேர்வுக்கு முன் ரிவிஷனை முடித்தால் தேர்வின் பொழுது மனத்தில் தேர்வைப் பற்றிய பயம் இருக்காது.

✡ தேர்வுக்கு முன் தினமும் காலை 4 மணிக்கு எழுந்திருக்கும் மிக நல்ல, ஆரோக்கியமான பழக்கதத்தைக் கொண்டு விளங்கும் மாணவ, மாணவியர் தேர்வுகளில் மிக அதிக மதிப்பெண்கள் பெறுகிறார்கள் என்பது மட்டுமல்லாமல் ஆரோக்கியமாகவும் இருக்கிறார்கள் என்பது பலரது அனுபவமாகும். ஒரு நாளின் 24 மணி நேரத்தில் மிக முக்கியமானது. இந்த அதிகாலை 4 - 6 மணி என்று அழைக்கப்படுகின்றது. அதிகாலையில் அமைதியான சூழ்நிலையில் படித்தால், நன்கு மனதில் பதியும். முந்திய இரவு 10 மணிக்கு உறங்கச் சென்றுவிடவேண்டும். அதிகாலை 4 மணிக்கு எழுந்திருப்பது ஆரம்பத்தில் கொஞ்சம் கஷ்டமாக இருந்தாலும் பழக்கத்தால் எளிதாகிவிடும். பகு படுக்கையில் உடல் கிடந்தாலும் அதிக மதிப்பெண் பெற்று வாழ்க்கையில் முன்னேறத் துடிக்கும் மாணவ மாணவியர்களின் அடிமனம் "எழுந்திரு படி" என்று உறுத்தி எழுப்பிவிடும். மனம் பழக்கத்தின் அடிமை.

✡ நண்பர்களுடன் சேர்ந்து படிப்பதைக் காட்டிலும் தனியாகப் படிப்பதுதான் சிறந்தது. ஏனெனில், நண்பர்களுடன் சேர்ந்து படிக்கையில் பாடதைத் தவிர வீண் வாதங்களும், வெட்டிப்பேச்சுக்களும் அவ்வப்பொழுது எழுந்து அருமையான நேரத்தை நாமறியாமல் வீணடித்து விடும். நேரம் பொன்போன்றது. படிக்கும் கடமை கண் போன்றது. இதைக கருத்திற் கொண்டு தனியாகத் தேர்வுக்குத் தயார் செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

✡ நண்பர்களுடன் "இந்தக் கேள்வி வரும். அது வராது" என்ற தேவையற்ற விவாதங்களைத் தவிருங்கள்.

✡ சத்தம் போட்டுப் படிப்பதைக் காட்டிலும் மனத்திற்குள் அமைதி

யாகப் படிப்பது தான் சிறந்தது.

✡ இரவில் வெகுநேரம் விழித்துப் படித்தல், டீ, காபி அருந்துதல் போன்ற பழக்கங்களால் உடல் நலம் கெடும். அநேக விடுதி மாணவ மாணவியர் இந்த வழக்கத்தால் தங்கள் உடல் நலத்தைக் கெடுத்துக் கொள்வதுடன் காலையிலும் தூங்கும் கெட்ட பழக்கதால் இல்லாத வியாதிகளையும் வரவழைத்துக் கொண்டு நோயாளாய் காட்சிதருகிறார்கள்.

தேர்வு நாள் அன்று:

✡ தேர்வுக்குத் தயார் செய்வது எவ்வளவு முக்கியமோ அதைவிட முக்கயம் தேர்வு அன்று தேர்வு எழுதுவதாகும். சிலர் விழுந்து விழுந்து படித்துவிட்டுத் தேர்வு சமயத்தில் உடல்நலக்குறைவுக்கு ஆளாவார்கள். இது விரும்பத்தக்கது அன்று என்று உங்கள் அனவைருக்கும் தெரியும். எனவே, தேர்வுக்கு முதல் நாள் இரவு வழக்கம் போல் 10 மணிக்கே படுக்கச் சென்று விடுங்கள். அதிகாலையில் வழக்கம்போல் 4 மணிக்கு எழுந்து விடுங்கள்.

✡ தேர்வு நாள் அன்று தேர்வு ஆரம்பிப்பதற்கு அரை நேரத்திற்கு முன்பே தேர்வு நடைபெறும் இடத்திற்குச் சென்று தனியே அமர்ந்து போர்ஷனை ஒரு முறை திருப்பிப் பார்ப்பது நல்லது. மற்ற நண்பர்களுடன் அன்றைய தேர்வு குறித்த வீண் சர்ச்சையில் ஈடுபடுவது முற்றிலுமாகத் தவிர்க்கப்பட வேண்டும். தேர்வு எழுதுவதற்கு முன் மனம் எந்தளவுக்குப் பரபரப்பும் படபடப்பும் இன்றி அமைதியாக இருக்கிறதோ அந்தளவுக்கு விடைகளைச் சரியாக எழுதி அதிக மதிப்பெண்களைப் பெறுவதற்கான வாய்ப்பு. அதிகம் உள்ளது என்பதை மனதில் பதிய வையுங்கள்.

✡ தேர்வு அறைக்குள் ஹால் டிக்கட், பேனா, கலர் பென்சில் தவிர வேறு எதையும் கொண்டு செல்லக் கூடாது. குறிப்பாக புத்தகத்தின் சில பகுதிகள், பிட்பேப்பர்கள் போன்றவற்றை மறந்தும்கூட எடுத்துச் செல்லக்கூடாது.

✡ தேர்வு அறைக்குள் சென்று உங்களுக்கெனக் கொடுக்கப்பட்டிருக்கும் இருக்கையில் அமர்ந்ததும் கண்களை மூடி உங்கள் இஷ்ட தெய்வத்தைக் குறித்து மனதிற்குள் ஒரு நிமிடம் பிரார்த்தனை செய்யுங்கள்.

✡ ஒரு பேனாவுடன் அதே நிறத்திலுள்ள மையில் நன்கு எழுதும் மற்றொரு பேனாவையும் உடன் வைத்திருங்கள். ஒரு பேனா மக்கர் செய்தால், நேரத்தை வீணாக்காமல் இன்னொரு பேனாவை எடுத்து எழுதுவதைத் தொடரலாம்.

✡ விடைத்தாளில் உங்கள் ரிஜிஸ்தர் எண்ணை முதலில் அடித்தல் திருத்தல் இல்லாமல் தெளிவாக எழுதிவிடவேண்டும். ஒவ்வொரு கூடுதல் விடைத்தாளிலும் ஆரம்பத்தில் உங்களது ரிஜிஸ்தர் எண்ணையும், பக்க எண்ணையும் எழுதிய பிறகே விடையை எழுத ஆரம்பிக்க வேண்டும்.

✡ முதலில் கேள்வித்தாளிலுள்ள கேள்விகள் அனைத்தையும் ஒரு தடவை படித்துவிடவேண்டும். பிறகு எந்தக் கேள்விக்கு உங்களுக்கு மிக நன்றாக விடை தெரியுமோ அதைத் தெளிவாக அடித்தல் திருத்தல் இல்லாமல் எழுதுங்கள். இவ்வாறு அழகான கையெழுத்தில் விடைகளைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் எழுதுவதானது விடைத்தாள் திருத்துபவரின் மனத்தில் உங்களைப் பற்றிய உயர்வான எண்ணத்தை உண்டாக்கிச் சிறிது கூடுதலாகவே நீங்கள் மதிப்பெண் பெற வழிவகுக்கும்.

✡ மொத்த நேரத்தைச் சமமாகப் பங்கிட்டுக் கேள்வித்தாளில் கொடுக்கப்பட்டிருக்கும் அத்தனை கேள்விகளுக்கும் (சாய்ஸைக் கருத்தில் கொண்டு) பதில் எழுதவேண்டும். சாய்ஸுக்கு அதிகமான விடையளத்தலைத் தவிர்க்கவேண்டும். இது விடை திருத்துபவரின் மனத்தில் உங்களைப் பற்றிய தவறான எண்ணங்களுக்கு வழிவகுக்கும். எந்தக் கேள்வியையும் பதில் எழுதாமல் விடுதல்கூடாது.

✡ தேர்வு நேரம் முடிவதற்கு 5 நிமிடங்களுக்கு முன்னமேயே பக்கங்களை ஒழுங்காக அடுக்கி நூலினால்கட்டி விடையைச் சரிபார்க்கவும்.

✡ விடையின் இறுதியில விடைத்தாள் திருத்துபவருக்கு எந்தவிதமான கோரிக்கையையும் எழுதாதீர்கள். சில மாணவ, மாணவியர் இவ்விதம் செய்கிறார்கள். இதனால் மதிப்பெண் எந்த வகையிலும் அதிகரிக்க வாய்ப்பே கிடையாது.

✡ குறித்த கேள்விக்குக் குறித்த பதிலைச் சுருக்கமாக எழுதும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள். வீண் கதையை எழுதிப் பக்கத்தை நிரப்பினால் மதிப்பெண் கிடைக்காது. விடைத்தாள் திருத்துபவர்கள் இத்தனை "பாயின்ட்" ஸுகளுக்கு இத்தனை மதிப்பெண் என்று கணக்கிட்டுத்தான் மதிப்பெண் அளிப்பார்கள்.

தேர்வு எழுதிய பின்

✡ தேர்வு எழுதி முடித்ததும் கூடிய மட்டும் சகமாணவர்களுடன் அன்று நடந்த தேர்வைப் பற்றி வீணான சர்ச்சையில் ஈடுபடாமல், நேராக விடுதி அறைக்கோ, வீட்டிற்கோ வந்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். மறுநாள் அல்லது அடுத்த தேர்வுக்குத் தயார் செய்யவேண்டுமல்லவா.

முயற்சி திருவினையாக்கும். உழைப்பு உயர்வைத் தரும் வெற்றி உங்களுக்கே.

விவேகமுள்ள கன்னியர் ஐவர்

மணமகன் வரவை எதிர்கொள்ள
மணமகள் தோழியர் பத்துபேர்
மணவிழா காணச் சென்றுமே
விளக்குடன் அங்கே விழித்திருந்தார்

முன்மதியுடைய பெண்கள் ஐயர்
எண்ணெய்யும் எடுத்துச் சென்றனரே
மணமகன் வரவு காலம் தாழ்த்தவே
விழாவினர் அனைவரும் தூங்கினரே.

நள்ளிரவில் வரவு அறிவிக்கவே
துள்ளி எழுந்தனர் மணவீட்டினர்
விளக்குகள் எல்லாம் அணைந்திடவே
வெறுமையர் வந்தவர் அவதியுற்றார்

விளக்கொடு எண்ணை எடுத்த ஐயவர்
விருப்புடன் மணவாளனுடன் சென்றார்
அறிவிகள் அப்போது கடைக்குச்செல்ல
அவ்வேளை மணமகன் வந்துவிட்டார்.

திருடனை போல வருமென்றார் யேசு
திருமகனின் இரண்டாம் வருகை
விழித்திருப்போர் மணவிருந்தில் கலப்பர்.
தூங்குவார்பெறுவார் தண்டனை.

அபிராஜன்.

ஒட்டகம் சொன்ன கதை

சாமியார்

வந்த நாளிலிருந்து ஒரு பேச்சு மூச்சையும் காணன். முந்தி யெண்டால் ஜெருசலேம் திருப்பயணத்துக்கு பிறகு நிறைய கதை எங்களுக்குச் சொல்லிறது. இப்ப ஏன் கடும் மௌனம். என்னத்தை எதைச் சொல்லிறது. எல்லாம் ஒரே திகிர் மர்மம் ஒரே திகைப்பு. திருப்பயணம் தனி அனுபவத்தான் வியாபாரத்துக்கு போற மாதிரி இருக்காது. எங்கட தலைவர் எத்தினை முறை போயிருக்கிறார். என்னத்துக்கும் திருப்பயணம் போறண்ட நான் தான், விலாசம் காட்டிறது. எவ்வளவு பேர் வருவினம். முசுபாத்திகள், பிராக்குகள் சேட்டைகள் எல்லாம் கிடையாது. எங்கட மன்றாட்டுக்கள் வானத்தில போற போல அகிற்புகை ஒரு பக்கம், மறுபக்கம் திருபாடல்களை பாடிக்கொண்டு பக்தியோட வரிசையாய் பேறதை சொல்லிடமுடியாத அனுபவம். இந்த முறையும் போய் அதே இடத்தில்தான் விட்டுட்டு எங்கட தலைவர் கோயிலுக்கு போயிற்றார். இந்த முறை பொந்தகோஸ்து பெருநாளுக்கு நல்ல சனம். நானும் மற்றவையோட கதைச்சபடி இருந்தனான். போனமுறை வந்த இயேசு என்ட மெசியா வருவாரோ என கேட்டதுதான் தாமதம், உனக்கு ஒரு இழவும் தெரியாது. அவரை தலைமைச் சங்கம் பிடிச்சு சிலுவையில் அறைஞ்சுபோட்டுது. அவருக்குப் பின்னால சுத்தித் திரிஞ்ச சீடப்பிள்ளைகளும் எங்க ஒளிஞ்சினமோ தெரியாது. எண்டாலும் அவர் எவ்வளவு நன்மை செய்திருக்கிறார். எல்லாத்தையும் சனம் மறந்து போட்டுது. உஸ் பெரிசா கதைக்கக் கூடாது. அவர் உயிர்த்து விட்டதா கதை இலாவுது. எண்டு சொல்லி வாயை மூட முன்னுக்கு சூறை காற்று சுழண்டு சுழண்டு வீச பெரிசா சத்தமும் இரைச்சலும் கேட்டுது. நாங்க இருந்த இடத்திற்கு முன்னுக்கு இருந்த மேல்மாடியை சுத்தி ஒரே சனக்கும்பல். அப்ப மேல்மாடியிலிருந்து பெரிய சத்தம் வரத்தொடங்கினது. நீங்கள் குழம்பவேண்டாம். நாங்கள் குடிவெறியில் மதிமயங்கவில்லை. நீங்கள் நசரேனாகி இயேசுவை சிலுவையில் அறைந்து கொண்டீர்கள். கடவுள் அவரை உயிர்ப்பித்தார். கடவுள் ஆண்டவரும் மெசியாவும் ஆக்கினார். என்டெல்லாம் சொல்ல சொல்ல வந்த சனம் மார்பில அறைஞ்சு கொண்டு துக்கமாய்க்கேட்டுது. பேசிற ஆள் ஒரு கலிலேயன், ஒன்றுமே படிக்காத ஆள். எப்படி தெளிவா பேசுறார். நாங்கள் எங்கட மொழியில விளங்கிக் கொள்ளுறம் என்று தங் களுக்குள்ள பேசினதை நான் கேட்டனான். நாங்கள் என்ன செய்யவேண்டும் எண்டு வந்த ஆக்கள் கேட் டினம். நீங்கள் மனம் மாறுங்கள் உங்கள் பாவங் களிலிருந்து மன்னிப்புப் பெறுங்கள், இயேசுக் கிறிஸ்து வின் பெயரால் திருமுழுக்குப் பெறுங்கள் எண்டு சொல்லி முடிய முந்தி கன ஆக்கள் இயேசுவே ஆண்ட வர் என்று அறிக்கையிட் டதை பார்த்தனான். அதில கிட்டத்திட்ட 3000 பேர் இருக்கும்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சிகள்)

போல் அடிக...

ரது குடும்பத்திற்கும், தென்இந்திய - திருச்சபைக்கும், மட்டுமல்ல அனைவருக்குமே பேரிழப்பாகும்.

போல் அடிகளாரின் ஆத்மா இறைபதம் நித்திய இளைப்பாறுதல் பெறவும், துயருற்று இருக்கும் அவரது குடும்பத்திற்காகவும் தெளிவு பிரார்த்திக்கின்றது.

ஆரோக்கிய....

வளர்வதிலேதான் எமது சமூக விடுதலை தங்கியுள்ளது. இவை குடும்ப வளர்ப்பிலும் சூழல் முன்மாதிரியாலும் நற்பண்புகளை ஊட்டுவதன் ஊடாக புதிய சமுதாயம் உருவாக இளையோரே முன்நின்று உழைக்கவேண்டும் என இன்றைய இளையோருக்கு அழைப்பு விடுத்த ஆயர், வாழ்வதற்கு வழிகாட்ட கால் நடைகளையும், கடல்தொழில் உபகரணங்களையும் பயனாளிகளுக்குக் கையளித்தார்.

நம்பிக்கை..

இன்று அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும், மக்களுக்கும் ஏன் சமாதானம் தேவைப்படுகிறது? ஏன் சமாதானத்தை விரும்புகிறார்கள்? உண்மையில் மக்கள் எதிர்பார்க்கும் சமாதானத்திற்கும், ஏனைய பலம் வாய்ந்த அமைப்புக்கும், இடையில் ஏதாவது ஒற்றுமை உண்டா? இல்லையேல் மக்களை கருவியாக பாவித்து தமது நோக்கங்களை நிறைவேற்று வதற்காக பலம் வாய்ந்த அமைப்புக்கள் பாடுபடுகின்றனவா? என்ற வினாவை நாம் எழுப்ப வேண்டும்.

நாம் எமது அனுபவங்களை ஒரு கருவியாகப் பாவித்து பிறரின் துன்பத்தையும், அவர்களின் இன்னல்களையும் நியாயப்படுத்தக் கூடாது. குறிப்பாக தெற்கில் உள்ள மக்களின் வறுமைநிலையையும், இடமற்ற நிலையையும் வடக்கோடு ஒப்பிடுதல் தடை செய்யப்பட வேண்டும். தெற்கில் வறுமையின் காரணமாக இவ்வனுபவங்கள் ஏற்படுகின்றன. ஆனால், வடக்கிலே யுத்தத்தின் காரணமாக மக்கள் வறுமை நிலைக் குள்ளும், இடம் பெயர்ந்த அனுபவத் துக்குள்ளும் செல்கிறார்கள்.

கிறிஸ்துவின் உயிர்ப்பு நம்பிக்கையை தருகின்றது. அந்த நம்பிக்கையே வடக்குவாழ் மக்களிலே அவதானிக்கலாம். எத்தனை இடிபாடுகள் இழப்புக்கள் இருந்த போதிலும், தம் இடிபாடுகள் மத்தியிலும் தம் நம்பிக்கையை கைவிடாது தொடர்ந்தும் உயிர்ப்பின் நம்பிக் கையில் தங்கள் வாழ்வை புனரமைத்து வருவதை பார்க்கும்போது கிறிஸ்துவின் உயிர்ப்புக்கு இச்சமூகம் எவ்வளவு உயிர்ப்பூட்டம் கொடுக்கிறது என்பதை நாம் அவதானிக்கலாம். எனவே இன்று திருப்பணியாளர்கள் தாம் வாழும் சமூகத்தை உயிர்த்தெழச் செய்ய புதிய நம்பிக்கையை வழங்க அழைக்கப்படுகி றார்கள் என இம்மன்றம் அழைப்பு விடுகின்றது.

மேலும் இம்மன்றம் சமூகமாக மாத்திரமன்றி, தனிநபர்களாக ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி [illegible] இம்மன்றம் கருத்து வெளியிடுகை விடுக்கையில் பிற இனத்தைக் குறித்த காழ்புணர்வுகளை படிப்படியாக எம்மைவிட்டு அகற்ற வேண்டும். நம்காரியங்களை இன அடிப்படையில் பார்க்காது மனிதாபிமான அடிப்படையில் பார்க்கவும், மற்றவர்களில் இருக்கின்ற நன்மைகளை அடையாளம் காணவும் அழைக்கப்படுகின்றோம்.

உண்மையை அன்போடு மக்களுக்கு எடுத்துக்கூறி, ஒருவரை ஒருவர் அன்பின் அடிப்படையில் புரிந்து கொள்ள வேண்டும். சமாதானத்தின் ஒப்புரவாக்கல் பணி எமது வழிபாடுகளில் அடிக்கடி பயன்படுத்தவும் எங்கள் மன்றாட்டுக்களில் இதை முன்னெடுக்கவும் வேண்டும். தனிநபர்களாக நாங்கள் எங்களுக்குள்ளே, குடும்பத்திற்குள்ளே, திருச்சபைக்குள்ளே, இனங்களுக்குள்ளே, இயற்கைக்கிடையே உண்டாகும் முரண்பாடுகளை தீர்த்துக்கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

வடபிராந்திய திருப்பணியாளர்கள் ஆற்ற வேண்டிய பணிகள் பற்றி [illegible] யில் திருச்சபை மட்டத்தில், மக்கள் மட்டத்தில் சமாதானத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் மறைஉரைகள், வேதப்படிப்பு, என்பன நடத்தப்படல் வேண்டும். சுவர்ஒட்டிகள் மூலமும் விழிப்புணர்வைக் கொண்டுவர தொழிற்படல்.

மக்கள் சமாதானத்தின் விதைகளை விதைக்க தூண்டவேண்டும். சமாதானத்தின் தொழிற்பாட்டில் அரசு - விடுதலைப்புலிகள் போன்றோர் தவறும் பட்சத்தில் அவர்கள் குற்றத்தை சுட்டிக்காட்டி, தக்கவழியில் செயற்பட அறிக்கைகள் மூலம் பணியாற்ற வேண்டும். இதற்காக திருச்சபை தன்னையே தியாகம் செய்ய வேண்டும்.

திருச்சபை இந்த சமாதானயாத்திரையை முன்னெடுத்துச்செல்ல மக்களுடனும், ஏனைய மதங்களுடனும் உரையாடல்களை மேற்கொண்டு நிகழ்ச்சித் திட்டங்களை வரைவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும் முனைப்புடன் இயங்கவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org